DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | |
|---|---|
| Case No. | CC . 164/2009 |
| Deposition of Witness for | Prosecution PW 7 |
| Name | பாலகிருஷ்ணன் |
| Father / Husband Name | பஞ்சவர்ணம் |
| Village | |
| Taluk | கோரவலசை |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 01st April 2024.

---

**(6 வது எதிரி ஆஜர்).**

**(1வது எதிரி இறந்துவிட்டார்).**

**(2 முதல் 5 மற்றும் 7 முதல் 9 எதிரிகள் ஆஜரில்லை. 2 முதல் 5 மற்றும் 7 முதல் 9 எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது)**

**முதல் விசாரணை:-**

1) நான் கோரவலசை கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 மற்றும் 2 யைத் தெரியும். ஆஜர் எதிரியைத் தெரியும். மற்ற எதிரிகளையும் தெரியும். சுமார் 15 வருடங்களுக்கு முன்பு மாலை 04.00 மணியளவில் கோரவலசையில் உள்ள அ.சா.2 ராமு வீட்டின் அருகே ஒரே சத்தமாக இருந்தது. எதிரிகள் வகையறாவைச் சேர்ந்த 9 பேர் அங்கு

இருந்தார்கள். ராமுவுடன் பெண் கொடுக்க மறுத்தது குறித்து பிரச்சனை செய்து கொண்டிருந்தார்கள்.

2) அந்த பிரச்சனையில் ராமு, மணி மற்றும் 8 நபர்களுக்கு காயம் ஏற்பட்டிருந்தது. மணி என்பவருக்கு இரண்டு கைகளும் முறிந்துவிட்டன. சுப்பிரமணிக்கு ஒரு கை முறிந்து விட்டது. மற்ற நபர்களுக்கு சிறு சிறு காயங்கள் இருந்தது. ஆம்புலன்சிற்கு பெருமாள் என்பவர் போன் செய்தார். நான் அப்போது அங்கு தான் இருந்தேன். காயம்பட்ட நபர்களை ஆம்புலன்ஸ் மூலமாக சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு நானும் பெருமாள் என்பவரும் தான் கொண்டு வந்து சேர்த்தோம். 15 வருடங்கள் ஆகிவிட்டதால் அங்கு நடந்த சம்பவம் முழுவதும் ஞாபகமில்லை. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-**</u>

1) எனது சொந்த ஊர் எது என்றால் மூலக்கரை. அங்கு தான் குடும்பத்துடன் விவசாயம் செய்து வாழ்ந்து வருகிறேனா என்றால் ஆமாம். சம்பவம் நடந்ததாக சொல்லும் இடம் எது என்றால் கோரவலசை. இரண்டு கிராமத்திற்கு இடைப்பட்ட தூரம் எவ்வளவு என்றால் 1 கி.மீ. சம்பவம் பற்றி எனக்கு எப்படித் தெரியும் என்றால் நான் சேத்தூரில் நின்று கொண்டிருந்தபோது சத்தம் கேட்டுத் தான் அந்த இடத்திற்கு சென்றேன். சேத்தூரில் எந்த இடத்தில் நின்று கொண்டிருந்தேன் என்றால் டீக்கடையில் நானும் பெருமாளும் நின்று கொண்டிருந்தோம். இரண்டு பேரும் தான் சம்பவ இடத்திற்கு சென்றோமா என்றால் ஆமாம். இருவரும் ஒரே சைக்கிளில் தான் சென்றோம்.

2) மேலச்சேத்தூருக்கும் அ.சா.1 ன் வீட்டிற்கும் எவ்வளவு தூரம் என்றால் சுமார் 1/2 கி.மீ. சம்பவ இடத்திற்கு எவ்வளவு நேரத்தில் நான் சென்றேன் என்றால் சத்தம் கேட்டு 5 நிமிடத்தில் சென்றுவிட்டேன். நான் அங்கு சென்ற போது சண்டை நடந்து முடிந்துவிட்டதா என்றால் நாங்கள் அங்கு சென்று தான் சண்டையை விலக்கிவிட்டோம். மேற்படி சம்பவத்தில் எனக்கு காயம் ஏற்பட்டதா என்றால் இல்லை. சண்டை எந்த இடத்தில் நடந்தது என்றால் ராமுவின் வீட்டிற்குள்.

3) வழக்கு சம்பந்தமாக நான் எதுவும் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. அ.சா.1 கொடுத்ததாக சொல்லும் புகாரில் நான் கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை. போலீசார் என்னை காலை 11.00 மணிக்கு விசாரணை

செய்திருப்பார்களா என்றால் ஆமாம். நான் சம்பவ இடம் சென்றபோது அங்கு கூட்டமாக சண்டை போட்டுக் கொண்டிருந்ததால் யார் யாரை அடித்தார்கள் என்று எனக்கு குறிப்பிட்டு தெரியாது என்றால் சரிதான். அ.சா.1 வுடன் இருந்த 10 நபர்களும் வெளியூரைச் சேர்ந்தவர்கள் என்றால் ஆமாம். எதிரிகள் அனைவரும் உள்ளூரைச் சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். பூரணத்தின் கணவர் ராமு எனக்கு என்ன உறவு என்றால் மாமா முறை.

4) ராமுவிற்கு பெருமாள் சித்தப்பா உறவு முறை. எதிரிகள் தரப்பினரை பூர்ணம் வகையறாவைச் சேர்ந்தவர்கள் தாக்கியதால் எதிரிகளுக்கும் காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். எதிரிகள் கொடுத்த புகார் மீது பூரணம் வகையறா மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். பெருமாள் என்னுடன் வந்தார் என்றால் சரிதான். பெண் கொடுப்பதில் தான் இருதரப்பினருக்கும் இடையே பிரச்சனை என்றால் சரிதான். பூசைத்துறை வகையறாவுடன் நான் தற்சமயம் பேசிக் கொள்வது இல்லை என்றால் சரியல்ல. பேசிக்கொள்வேன். நான் சம்பவம் நடக்கும் போது அங்கு இல்லை என்றாலும் புகார் தாரர் எனது உறவினர் என்பதால் அவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**(ஒம்)திருமதி.J.அனிதா கிறிஸ்டி, 01.04.2024**

**நீதித்துறை நடுவர் எண்.1,**

**சிவகங்கை.**

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 1,
சிவகங்கை.